Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, DECEMBER 29, 2023

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 29, 2023 | ஒளி: 09 கதிர்: 160 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

# ‘கேப்டன் விஜயகாந்த்’ கொரோனாவில் மரணம்



தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தே.மு.தி.க) நிறுவனத் தலைவரும் நடிகருமான விஜயகாந்த் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை (28) காலை காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது (71).

அவரது மறைவால் தேமுதிக கட்சித் தொண்டர்கள், திரை ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். விஜயகாந்த் இல்லத்தில் உள்ள தேமுதிக கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. அன்னாரின் பூதவுடல், தே.மு.தி.க தலைமை அலுவலகத்தில் விஜயகாந்தின் உடல் வெள்ளிக்கிழமை (29) நல்லடக்கம் செய்யப்படும்.

(மேலதிக விபரங்கள் பக்கம் 6)

# “மீண்டும் முகக்கவசம் அணிவதில் தவறில்லை”



கடந்த கொவிட் தொற்றுநோய் காலத்தில் முகக்கவசம் அணிவதன் மூலம் பல சுவாச நோய்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பது தெரியவந்ததாகவும், அப்போது சுவாச நோய்கள் குறைந்த அளவில் இருந்ததாகவும் தெரிவித்த சுகாதார அமைச்சர் ரொமேஷ் பத்திரன, எனவே, மீண்டும் முகக்கவசம் அணிவதில் தவறில்லை என்றார்.

அண்மையில் பரவிய காய்ச்சலால் புதிய வகை கொவிட் இலங்கைக்குள் நுழைவதற்கான அச்சுறுத்தல் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும், அது தொடர்பில் தாம் அறிந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தேவையான அனைத்து திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். பின்தொடர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தொடர்ச்சி P2



# கொடுப்பனவுகளை கொடுக்காவிடின் வெளிநாடுகளுக்கு சென்றுவிடுவர்

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

பொது சுகாதாரத் துறையில் தற்போதைய சிறப்பு மருத்துவர்களின் பற்றாக்குறை மற்றும் மூளைசாலிகள் வெளியேறுவதைத் தடுக்க வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அத்தியாவசிய முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் தேவையற்ற தாமதம் ஏற்பட்டுள்ளது என மருத்துவ நிபுணர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

# மற்றுமொரு கொரோனா மரணம் பதிவானது



சுகயீனம் காரணமாக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, அவரது மரணத்திற்கான காரணம் கொவிட்-நிமோனியா என தெரியவந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யக்கல பிரதேசத்திலிருந்து சற்று தொலைவில் உள்ள பிரதேசத்தில் வசித்து வந்த 63 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பிரேதப் பரிசோதனையின் போது, அவர் கொவிட் நிமோனியாவால் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாக கம்பஹா மரண விசாரணை அதிகாரி டாக்டர் பி.பி.ஆர். பி.ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# மலையகத்தில் பாரிய மண்சரிவு வடக்கு, கிழக்கில் வான் பாய்கிறது

வ.சக்தி, ரமேஷ் ஆறுமுகம்

நாட்டின் பல பாகங்களிலும் தற்போது நிலவுகின்ற, சீரற்ற வானிலையால், மலையகத்தில் ஆங்காங்கே மண்சரிவு ஏற்பட்டுள்ளது. தாழ்நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. வடக்கு, கிழக்கு மாணங்களில் குளங்கள் வான் பாய்கின்றன.

தொடர்ச்சி P2



# கோட்டைக்கல்லாறு கடற்கரையில் கரையொதுங்கிய மர்மப் பொருள்

வ.சக்தி, ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு-கோட்டைக்கல்லாறு கடற்கரையில் மர்மப் பொருள் ஒன்று வியாழக்கிழமை (28) காலை கரை ஒதுங்கியுள்ளது.

அம்மர்மப்பொருள் கடல் அலைகளினால் அள்ளுண்டு கல்முனை கடற்பிரதேசப் பக்கம் சென்று விட்டதாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவி பணிப்பாளர் ருக்சான் குரூஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ‘யுக்திய’வில் 1,422 பேர் கைது

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையான யுக்தியவையில் 1,422 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் 35 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதன்கிழமை (27) முதல் மேற்கொள்ளப்பட்ட 30 மணித்தியால நடவடிக்கையில் 347 கிராம் ஹெரோயின், 827 கிராம் ஐஸ் போதைப்பொருள், 05 கிலோ 475 கிராம் கஞ்சா, 6,691 கஞ்சா செடிகள், 208 கிராம் மாவா மற்றும் 3,574 கிராம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# “தடுக்க, நிறுத்த தவறின”



நீதித்துறையின் தீர்மானத்தின்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்தால், பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு திருச்சபை தயாராக உள்ளது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# புதிய திரிபால் அச்சம் இல்லை

ஜே.என்1 ஒமிக்ரோன் உப வைரஸ் திரிபு எனப்படும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மாதிரிகள் நாட்டின் 19 வைத்தியசாலைகளில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜே.என்1 ஒமிக்ரோன் உப வைரஸ் திரிபு உலகின் 41 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருளுக்கான தேவை குறைந்தது



இலங்கையில் எரிபொருளுக்கான தேவை சுமார் 50 சதவீதத்தால் குறைந்துள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதனால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு எரிபொருள் பாவனை கணிசமாகக் குறைந்துள்ளது.

தொடர்ச்சி P2

# 6 பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

6 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை மேலும் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், புதிய விலைகள் வியாழக்கிழமை (28) முதல் அமுலுக்கு வரும் எனவும் லங்கா சதொச தெரிவித்துள்ளது.

425 கிராம் உள்ளூர் டின் மீனின் விலை 55 ரூபாவினாலும், உருளைக்கிழங்கு மற்றும் சிவப்பு அரிசியின் விலை தலா 5 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளதாகவும், சிவப்பு பருப்பு, வெள்ளை நாடு மற்றும் வெள்ளை அரிசி ஆகியவற்றின் விலைகள் தலா 1 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக சதொச தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# ஓய்வூதியத்தை இரத்து செய்ய முஸ்தீபு




அரச ஊழியர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்ய முன்மொழியப்பட்டுள்ளதாக தொழிலாளர் போராட்ட மையம் தெரிவித்துள்ளது. இந்த பிரேரணை தற்போது தேசியமயமாக்கல் தொடர்பான தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அதன் அமைப்புச் செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார். ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 2004 சுனாமி பேரலையில் சிக்கியோரில்

# 137 பேரில் உடல் பாகங்கள் இன்னும் இருக்கின்றன

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த இனந்தெரியாத 137 பேரின் உடற் பாகங்கள் காலி, கராபிட்டியவில் உள்ள மருத்துவ பீடத்தின் தடயவியல் மருத்துவப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





# வலுவான நாட்டை கட்டியெழுப்ப இலங்கையர்களாக முன்வர வேண்டும்

## முஸ்லிம் மார்க்கக் கல்வி தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு

## மலையக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும், இன்று நாடு நிறைவேற்ற வேண்டிய இரண்டு பிரதான பொறுப்புகள் எனவும் எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அந்த இரு இலக்குகளை அடைவதில் தன்னுடன் இணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கொடுப்பனவுகளை கொடுக்காவிடின் வெளிநாடுகளுக்கு சென்றுவிடுவர்

பொது சுகாதாரத்துறையில் தற்போது நிபுணத்துவ மருத்துவர் பற்றாக்குறை நிலவுவது அனைவரும் அறிந்த உண்மை. 2022ல் இருந்து, இலங்கையில் ஏற்பட்ட அண்மைய பொருளாதார வீழ்ச்சியானது நீண்டகால பற்றாக்குறையை மேலும் அதிகரித்தது. மருத்துவ நிபுணர்கள் பொதுத் துறையை விட்டு வெளியேறுவது (இடம்பெயர்ந்து அல்லது தனியார்த்துறையில் சேருவது) மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக்குப் பிறகு திரும்பாததால் பற்றாக்குறை பெரும்பாலும் ஏற்பட்டது.

பொதுத்துறையில் அவர்களின் சமமான பதவிகளுடன் ஒப்பிடும்போது பெறும் மொத்த ஊதியத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு, பொதுத்துறையிலிருந்து மொத்த தேசிய வருமானத்திலிருந்து வெளியேறுவதில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும், முக்கியமாகப் போக்குவரத்து போன்ற சில கொடுப்பனவுகளின் ஒப்பீட்டளவில் குறைப்பு காரணமாகும். தவிர, பிற சேவை சார்ந்த கொடுப்பனவுகள் சிவில் சேவையில் சமமான வகைகளுக்குக் கீழே வைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, பொதுத்துறை மருத்துவ நிபுணர்களால் செய்யப்படும் கட்டாய அழைப்பு கடமைகள் தகுந்த ஊதியத்திற்காக அங்கீகரிக்கப்படவில்லை மற்றும் கடமைகளின் போதுகூட நீண்ட தினசரி குறிப்புகள் மற்றும் மாதாந்திர படிவத்தை நிரப்பிய பின்னரே செலுத்தப்பட்டன என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் மருத்துவ நிபுணர்களால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியமான மருத்துவம் அல்லாத நிர்வாகப் பணிகள் எந்த ஒரு சேவைக் குறிப்பிட்ட கொடுப்பனவுக்கும் உட்பட்டது அல்ல. மேலும் ஒருங்கிணைந்த இடையூறு, தயார்நிலை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு, பொதுத் துறையில் இதே போன்ற பிரிவுகளுக்கு வழங்கப்படும் போக்குவரத்து மட்டும் கொடுப்பனவை விட மிகவும் குறைவாக இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

## மலையகத்தில் பாரிய மண்சரிவு...

இதனால் மக்கள், பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒருசில பிரதேசங்களில், போக்குவரத்துகள் முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. மரங்களும் முறிந்து விழுந்து, போக்குவரத்துக்கும் ஏனைய தொடர்பாடல் வசதிகள் மற்றும் மின் விநியோகத்துக்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில்,

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும். அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் வரை ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதி களில் பி ற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளி லும் வட க்கு, வடமத்தி ய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகா ணங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 40 கிலோமீற்றர் வரையிலான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## "மீண்டும் முகக்கவசம் அணிவதில் தவறில்லை"

இந்நோய் தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் எனத் தெரிவித்த அமைச்சர், கடந்த காலங்களில் மிகச் சிறந்த தடுப்பூசித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால், நாட்டில் நோய் எதிர்ப்புச் சக்தி மேம்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ரமேஷ் பத்திரன இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டில் கொவிட் பரவல் தொடர்பில் அதிகாரிகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் மீண்டும் ஜே.என்01 (JN 1 OMICRON) உப பிறழ்வான புதிய கொவிட் வைரஸ் திரிபு பரவி வரும் நிலையிலேயே அமைச்சர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார். தற்போது நாட்டில் மீண்டும் கொவிட் - 19 தொற்று பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கொரோனா வைரஸின் புதிய திரிபான ஜே.என்1 கடந்த செப்டம்பர் மாதம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் 41 நாடுகளில் பரவியுள்ளது. இலங்கையில் பரவும் அபாயம் இருக்கின்றதா என்பது தொடர்பில் அதிகாரிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரை அந்த தொற்று பரவும் அபாயம் குறைவாக இருந்த போதிலும் பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுவது பாதுகாப்பானதாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொவிட் கட்டுப்பாட்டுக்கான பரந்த தடுப்பூசி திட்டம் நடைமுறையில் இருந்தாலும், நாட்டு மக்கள் கொவிட்டில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு முகக்கவசம் அணிந்து கொள்வது உகந்தது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கொவிட் காலத்தில் போன்று மீண்டும் முகக்கவசம் அணியுமாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடணம் உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டைக்கல்லாறு கடற்கரையில் கரையொதுங்கிய மர்மப் பொருள்

கோட்டை கல்லாறு கடலில் புதன்கிழமை (27) மாலை மர்மப் பொருள் ஒன்று மிதந்துள்ளதை அங்குள்ள மீனவர்கள் அவதானித்துள்ளனர். இந்நிலையில் அப்பொருள் வியாழக்கிழமை (28) காலை கரை ஒதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு கரை ஒதுங்கியுள்ள பொருள் என்ன என்பது தமக்குத் தெரியாது, இப்பொருள் தொடர்ச்சியாக இவ்விடத்திலேயே இருக்குமாக இருந்தால் தமது மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பெரும் தடையாக அமையும். எனவே, இதனை சம்மந்தப்பட்டவர்கள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில், இதனை களுவாஞ்சிகுடி பொலிஸாரும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பொருள் சிவப்பு நிறத்தில் கூம்பக வடிவில் போத்தல் போன்று பெரியதாக அமைந்துள்ளதுடன் பொருளின் மேற்பகுதியில பி.எம்.ரி எனவும் பின்பக்கம் பி என்ற எழுத்தும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. குறித்த பொருளில் ஒருபக்கத்தில் சிறிய ரக டயர் ஒன்று பொருத்தப்பட்டு அதில் இரும்பிலான சங்கிலியும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்மர்ம பொருள் அலைகளினால் அள்ளுண்டு கல்முனை கடற்பிரதேசப் பக்கம் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

## 137 பேரில் உடல் பாகங்கள் இன்னும் இருக்கின்றன

குறித்த நபர்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை, அதே நேரத்தில் இந்த உடல்களிலிருந்து எலும்புத் துண்டுகள் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் என சட்ட வைத்திய அதிகாரி (JMO), பேராசிரியர் யு.சி.பி பெரேரா தெரிவித்தார் .சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஒன்பது மாதங்களில் தெல்வத்தை மற்றும் பெரலிய பகுதிகளில் சதுப்பு நிலங்களில் இருந்து இந்த உடற் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டதாகப் பேராசிரியர் பெரேரா தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர், இறந்தவர்களின் உறவினர்களால் அடையாளம் காண்பதற்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சடலங்கள் வைக்கப்பட்டதாகக் கூறிய அவர், எவ்வாறாயினும், உடல் உறுப்புகளின் அடையாளத்தை எவராலும் உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் அவர் கூறினார்.

## தேவை குறைந்தது

எரிபொருளுக்கான நுகர்வோர் தேவை சுமார் 50 சதவீதத்தால் குறைந்துள்ளதால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

விலைவாசி உயர்வால் மக்களின் வாகனப்பாவனையும் குறைந்துள்ளது. பலர் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துகின்றனர்.

முன்னைய பாவனையுடன் ஒப்பிடும் போது அத்தியாவசியப் பயணங்களுக்கு வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர். முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்களுக்கு ஓரளவே எரிபொருளைப் பயன்படுத்துகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மற்றுமொரு கொரோனா மரணம் பதிவானது

கம்பஹா மாநகரசபையின் கட்டுப்பாட்டில் உள்ள கசகஹவத்த சுடுகாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் உயிரிழந்தவரின் சடலம் தகனம் செய்யப்பட்டுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சில நாட்களுக்கு முன்னர் கண்டி வைத்தியசாலையில் கொரோனா மரணம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'யுக்திய'வில் 1,422 பேர் கைது

சட்டவிரோத சொத்துக்களுக்காக மூன்று சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் போதைக்கு அடிமையானவர்கள் 37 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரும் விசேட பணியகமும் இணைந்து 4,665 நபர்களில் 73 சந்தேக நபர்களை இதுவரை கைது செய்துள்ளனர்.

## "தடுக்க, நிறுத்த தவறின"

"நீதித்துறை வழங்கிய தீர்ப்புகளின்படி, அரசாங்கம் செயல்பட்டால் பொருளாதார நெருக்கடி போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க நேர்மையான முயற்சி எடுக்கப்பட்டால், அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை" என்று கர்தினால் கூறினார்.

"இந்த அரசாங்கம் நீதித்துறை வழங்கிய பல தீர்ப்புகளைப் புறக்கணித்துள்ளது," என்று அவர் மேலும் கூறினார்.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அந்தந்த அரசாங்கத்தை கர்தினால் விமர்சித்துள்ளார். முந்தைய நல்லாட்சியானது தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகவும் தற்போதைய ஆட்சி தாக்குதலைத் திட்டமிட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தத் தவறியதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

## ஓய்வூதியத்தை இரத்து செய்ய முஸ்தீபு

அரச சேவை ஓய்வூதியத்தை இரத்து செய்து பங்களிப்பு ஓய்வூதியமாக மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பங்களிப்பு ஓய்வூதியத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முதலீடு செய்யக் கூடியதாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இது மிகவும் ஆபத்தான பணி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 6 பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

இதன்படி, 425 கிராம் உள்ளூர் டின் மீனின் விலை 475 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு கிலோ கிராம் ஒன்றின் புதிய விலை 280 ரூபாவாகவும், சிவப்பு அரிசி ஒரு கிலோவின் புதிய விலை 175 ரூபாவாகவும், சிவப்பு பருப்பு கிலோ கிராம் ஒன்றின் புதிய விலையாகும். 309 ரூபாவாகவும், வெள்ளை நாடு கிலோ கிராம் ஒன்றின் புதிய விலை ரூபாய் 206 எனவும், ஒரு கிலோ கிராம் வெள்ளை அரிசியின் புதிய விலை 199 ரூபாய் எனவும் சதொச மேலும் குறிப்பிடுகின்றது.

## வலுவான நாட்டை கட்டியெழுப்ப...

நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அதேவேளையில், நல்லிணக்கம் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, எதிர்வரும் மார்ச் மாதம் அது தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

பதுளை குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் புதன்கிழமை (27) கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் புதிய இணையத்தளமும் ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு சஞ்சிகையை பாடசாலை அதிபர் ஏ.ஏ சமூனினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

நாட்டின் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் வகையில், அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு உலக நாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ளோம். இந்த வேலைத்திட்டத்துடன் நாம் முன்னோக்கிச் சென்றால், நிச்சயமாக நாட்டில் நிலையான பொருளாதாரத்தை உருவாக்க முடியும். அதேநேரம் நாட்டின் ஏனைய பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசியல் கட்சிகள் உட்பட அனைத்து தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என அழைப்பு விடுத்தேன். ஆனால் நாங்கள் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. இந்த நாட்டில் இன்று தீர்க்கப்பட வேண்டிய இரு பிரதான பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எம்முடன் இணைந்து செயற்படுமாறு மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன்.

நாட்டில் நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது முதல் விடயமாகும். இரண்டாவது விடயம் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும். ஒரு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல, நாட்டில் நல்ல பொருளாதாரம் மற்றும் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அத்துடன் இலங்கையர் என்ற அடையாளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அனைத்து மக்களும் இலங்கையர்களே. இன்று எமது நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சிங்கள அடையாளத்தையும், மதத்தையும், கலாசாரத்தையும் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல நாம் செயற்படுகின்றோம். ஏனைய இனத்தினரையோ, மதத்தினரையோ ஒருபோதும் சிறுமைப்படுத்தக்கூடாது. நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அனைவரும் இலங்கையர்களாக முன்னோக்கிச் சென்றால் மட்டுமே வளமான நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு ஏற்கெனவே தீர்வுகளை வழங்கியுள்ளோம், ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்கி வருகின்றோம். அத்துடன், ஏனைய இனத்தவர்களின் பிரச்சினைகளிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. யுத்தம் நிறைவடைந்த போதிலும், ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. அரசாங்கம் என்ற வகையில் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறோம்..

சிலர் தமது கிராமங்களை இழந்துள்ளனர். எனவே, 1985 ஆம் ஆண்டு வரைபடத்தின் பிரகாரம் செயல்பட முடிவு செய்துள்ளேன். அந்த வரைபடத்தின்படி, தற்போது எதாவது கிராமம் காடுகளால் மூடப்பட்டிருந்தால், அந்த கிராமங்களில் உள்ள மக்கள் குடியேற அனுமதிக்க வேண்டும். அதன் உரிமையை அந்த மக்களுக்கு வழங்க வேண்டும். அதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் ஏற்கனவே அந்த உரிமைகளைப் பெற்றுள்ளனர். இன்னும் சிலருக்கு அந்தப் பிரதேசங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை. நாங்கள் அந்த பிரச்சினைகள் தொடர்பில் தனித்தனியாக பணியாற்றி வருகிறோம். அத்துடன், காணாமற்போனோர் பிரச்சினை, இழப்பீடுகள் உட்பட இதுவரையில் தீர்க்கப்படாத சகல பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகின்றோம்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்தாலும், வலுவான பொருளாதாரம் இல்லை என்றால், மீண்டும் அதே பிரச்சினைகள் தலைதூக்கும். மலையக தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, செயல்பட்டு வருகிறோம். அவர்களுக்குக் காணி, கல்வி மேம்பாடு உள்ளிட்ட உரிமைகளை வழங்க விசேட திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம் என்றார்.




## மலையக மக்களைக் கௌரவித்து

# இந்தியா வெளியிடும் முத்திரை

இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், தமது உரிமைகளை வென்றெடுக்கவும் கௌரவமானதொரு வாழ்க்கையை வாழ்வதற்கும், பல்வேறு போராட்டங்களையும் தியாகங்களையும் செய்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், எமது மலையக மக்களுக்கான அங்கீகாரம் என்பது, இன்றைய சூழ்நிலையில் மாபெரும் தேவையாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனையின் பேரிலும் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) தலைவர் கே.அண்ணாமலையின் ஏற்பாட்டிலும், நம் மலையக மக்களைக் கௌரவிக்கும் வகையில், இந்திய தபால்துறை அமைச்சினூடாக முத்திரையொன்று வெளியிடப்பட்டு, இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

புதுடெல்லியில், இம்மாதம் 30ஆம் திகதியன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வின்போது, பாரதீய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி.நடா, கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானிடம் முதல் முத்திரை கையளிக்கப்படவுள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு இடம்பெயர்ந்தமை தொடர்பான நூற்றுக்கணக்கான ஆவணங்கள், கோப்புகள் பரிசீலக்கப்பட்டு, உரிய வரலாற்றுச் சுவடுகளோடு இந்த முத்திரையை வெளியிடுவதற்கு, இந்தியத் தபால்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதன்மூலம், இலங்கைக்கு இடம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பிலான வரலாறு, இந்தியர்களுக்கு எளிதில் எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வாறு வெளியிடப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க முத்திரையை, உலகின் மிகப்பெரிய அஞ்சல் வலையமைப்பைக் கொண்டுள்ள இந்தியாவின் 155,015க்கும் மேற்பட்ட தபால் நிலையங்களிலிருந்து, எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், சீனா, ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பூட்டான் உள்ளிட்ட 210க்கும் மேற்பட்ட நாடுகளில் 32,285,425க்கும் அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் வசித்து வருகின்றனர். இவ்வாறிருக்கையில், அந்த நாடுகளிலிருக்கும் மக்களுக்கு கிடைக்காத அங்கீகாரமொன்று, இலங்கையில் 200 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு கிடைத்திருப்பது, நம் மக்களுக்கு அளிக்கப்படும் மரியாதையாகவே பார்க்கப்படுகிறது.

உதவி, கடமை, பொறுப்புணர்வு என்ற எண்ணப்பாடுகளுக்கு அப்பால், நம் மக்களை நாம் தான் கௌரவிக்க வேண்டும், அவர்களுக்கு நாம் தான் அங்கீகாரமளிக்க வேண்டுமென்ற தொனியில், இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்காக முத்திரையொன்று வெளியிடப்படுவது, இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் நட்புறவைப் பறைசாற்றி நிற்பதோடு, மலையக மக்களால் இலங்கைக்கும் கௌரவம் கிடைத்திருக்கிறது.

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்:

# நடுவில் வந்தவரால் பரபரப்பு

■ எம் றொசாந்த்

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறும் விவகாரம் தொடர்பாகப் பேசப்பட்டபோது, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

வியாழக்கிழமை (28) நடைபெற்ற இந்த கூட்டத்தின்போது, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே கடுமையான தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்த நபரொருவர் கூட்டத்திற்கு நடுவே திடீரென வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

கட்சி ஆதரவாளர்களை அழைத்து அமைச்சர் கட்சி கூட்டத்தை நடத்துவதாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

குறித்த நபர்கள், பொது அமைப்பைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்து சர்ச்சைக்கு அமைச்சர் முற்றுப்புள்ளி வைத்தார்.

கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## இரஜமஹா விகாரையில்

# புதையல் தோண்டிய அறுவர் கைது



சூரியவெவ-கெமஹத்த புராதன இரஜமஹா விகாரையில் புதையல் தோண்டிய 6 பேர் கைது செய்யப்பட்டதாக சூரியவெவ பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சூரியவெவ பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் அதிகாலை 3 மணியளவில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சூரியவெவ, நமடகஸ்வெவ, செவனகல, மித்தெனிய மற்றும் துங்கம பிரதேசங்களைச் சேர்ந்த அறுவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சூரியவெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெமஹட புராண இரஜமஹா விகாரையின் கெமஹட பாறைக் கல்வெட்டுக்கு அருகில் உள்ள குளத்தின் கீழ் பகுதியில் புதையல் தோண்டிய போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இணைய மோசடியில் பணம் கொள்ளை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் இணைய மோசடியில் சிக்கி மேலும் இருவர் ரூ.26 இலட்சம் பணத்தினை இழந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோசடியினால் கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவை சேர்ந்த இருவர், ரூ.16 இலட்சம் மற்றும் ரூ.30 இலட்சம் பணத்திணை இழந்த நிலையில், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.



இந்நிலையில், புதன்கிழமை (27) யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு இடங்களை சேர்ந்த இருவர் ரூ. 20 இலட்சத்தையும் மற்றையவர் ரூ.6 இலட்சத்தையும் இழந்துள்ளதாக பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறான இணைய மோசடியாளர்களிடம் சிக்காது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## ஆசிரியர்களின் பாலியல் சேஷ்டை

# உடனடி விசாரணைக்கு பணிப்பு

பதுளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையொன்றில் கடமையாற்றும் ஆசிரியர்களில் இருவர் பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், பதுளை வலைய கல்விப் பணிமனையின் பணிப்பாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த இரண்டு ஆசியர்களும் அதேபாடசாலையில் கல்வி பயின்று வருகின்ற ஐம்பது மாணவர்களோடு தனியார் வகுப்பு நடத்தும் பேரில், பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டு வருவதாகக் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில், உடன் விசாரணைகளை ஆரம்பித்து கல்வி அமைச்சுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விசாரணைக்காக மூவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

# சின்ன இங்கிலாந்து வெள்ளத்தில் தத்தளிப்பு

■ செ.தி.வாகரன்

நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக நுவரெலியா-கந்தப்பளை பகுதியில் அதிக தாழ் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில், புதன்கிழமை (27) இரவு பெய்த கடும் மழை காரணமாக உடப்புஸ்ஸலாவ - நுவரெலியா ஊடான போக்குவரத்து தடைப்பட்டதுடன், கந்தபளை கோர்ட்லோட்ஜ் சந்தியில் பிரதான வீதிக்கு மேலாக வெள்ளநீர் பாய்ந்தோடியதால் போக்குவரத்து தடைப்பட்டு சில வீதிகள் சேதமடைந்துள்ளன.

சில பிரதான வீதி பகுதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்துள்ளதனால் வீதி அருகில் உள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலையில் மக்கள் விபத்தினை எதிர்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது





உடப்புஸ்ஸலாவ, ராகலை, கந்தப்பளை நகரில் இருந்து நுவரெலியாவிற்கு செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏனைய அரச திணைக்களங்களுக்கு அன்றாடம் தங்களின் சேவையினை பெறச் செல்லும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன், நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கந்தப்பளை பகுதிகளில் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாய நிலங்களில் தோட்டங்களில் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் இப்பாதிப்பு ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய காணிகள் மூழ்குவதற்கு முக்கிய காரணமென விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# தேவாரம் பாடியவர் விழுந்து உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

ஆலயமொன்றில் தேவாரம் பாடிக்கொண்டிருந்த நபரொருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம்-வல்வெட்டித்துறையை சேர்ந்த சி.இராசரத்தினம் (88) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயத்துக்கு தினமும் சென்று தேவாரம் பாடிவரும் நிலையில், வழமைபோன்று புதன்கிழமையும் (27) ஆலயத்திற்கு சென்று தேவாரம் பாடிக்கொண்டிருந்தபோது மயங்கி விழுந்துள்ளார்,

அவரை வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை, அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் கூறியுள்ளனர்.



## நன்னீர் மீன் உற்பத்தி நிலையத்திற்கு

# அமைச்சர் டக்ளஸ் விஜயம்

■ நடராஜா கிருஷ்ணகுமார்

கிளிநொச்சி- புதுமுறிப்பு நன்னீர் மீன் உற்பத்தி நிலையத்திற்குக் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா புதன்கிழமை (27) கண்காணிப்பு விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி-புதுமுறிப்பு நன்னீர் மீன் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ள நிலையிலேயே குறித்த விஜயத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இதன்போது குறித்த நிலையத்தின் முன்னேற்றம் மற்றும் உற்பத்தியாளர்களின் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்துள்ளார்.



இந்த உற்பத்தி நடவடிக்கைகள் மூலம் புதுமுறிப்பு நன்னீர் மீனவர் சங்கத்தினை சேர்ந்த சுமார் 40 குடும்பத்தினருக்கு நிரந்தர வாழ்வாதாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவுக்கு முறிந்ததில் இரு பெண்கள் பாதிப்பு



■ எஸ்.சதீஸ்

ஹட்டன் - நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா இன்ஜஸ்ரி பீரட் 03ஆம் இலக்க தேயிலை தோட்டத்தில் வியாழக்கிழமை (28) காலை தேயிலை பறித்து கொண்டிருந்த இரண்டு பெண் தொழிலாளர்கள் மீது பாரிய சவுக்கு மரமொன்று முறிந்து விழுந்ததில் இரண்டு பெண் தொழிலாளர்கள் காயமடைந்தனர். இவர்கள் இருவரும் டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் ஏகாடெரா சிலோன் (பிரைவேட்) லிமிடெட் 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் லிப்டன் டீஸ் எண்ட் இன்ஃப்யூஷன்ஸ் சிலோன் (பிரைவேட்) லிமிடெட் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென மேற்படி சட்டத்தின் 8வது பிரிவின்படி நாங்கள் இதன் மூலம் அறிவிக்கிறோம்.

**கம்பனியின் பழைய பெயர்:** ஏகாடெரா சிலோன் (பிரைவேட்) லிமிடெட்

**கம்பனியின் இலக்கம்:** பிவி 00237431

**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:** தளம் 2, இல. 192/10, 9வது ஒழுங்கை, நாவல வீதி, நாவல, கோட்டே

**கம்பனியின் புதிய பெயர்:** லிப்டன் டீஸ் எண்ட் இன்ஃப்யூஷன்ஸ் சிலோன் (பிரைவேட்) லிமிடெட்

பணிப்பாளர் சபையின் உத்தரவின்படி
கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனி செயலாளர்கள்
லிப்டன் டீஸ் எண்ட் இன்ஃப்யூஷன்ஸ் சிலோன் (பிரைவேட்) லிமிடெட்

# புதிய வ(லி)ரி சுமைகளை சுமக்கவிட்டு விடைபெறுகிறது 2023

இன்னும் இரண்டு நாட்களுக்குப் பின்னர் புத்தாண்டு பிறக்கவிருக்கின்றது. இருக்கின்றவர்கள் புத்தாண்டை வரவேற்பதற்குத் தயாராகி கொண்டிருக்கின்றனர். அன்றாடம் கூலி வேலை செய்து இரண்டொருவேளை மட்டுமே உண்டு வாழ்பவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்குச் சமாளிப்பு பதில்களைக் கூறி ஆறுதல் படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட யோசனைகள் யாவும் ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும். இதில், 15 சதவீதத்தில் இருந்த பெறுமதி சேர் வரி (வற்) 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அது சாதாரண மக்களிடத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும். இதனால், சாதாரண பொதுமக்களின் மீது, பெருஞ்சுமை சுமத்தப்படவுள்ளது.

முதலாளிமார்கள் மட்டுமன்றி சிறிய வர்த்தகர்களும் பொருட்கள் பதுக்கத் தொடங்கிவிட்டனர். விலை குறைந்திருக்கும்போதே, ஆகக்கூடுதலாகப் பொருட்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்திக்கொள்கின்றனர். இது அவர்களின் வியாபார நுட்பமாகும். எனினும், விலை குறைந்திருக்கும் போதே பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியாது சாமானியர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

சகல தீய பழக்கங்களையும் இன்றுடன் விட்டுவிடுவேன் எனவும் புத்தம் புதியத் திட்டங்களை நாளைமுதல் ஆரம்பிப்பேன் எனவும் சுயசத்தியம் செய்துகொள்ளும் நாளே வருடத்தின் கடைசி நாளாகும். அச்சத்தியத்தைக் காப்பாற்றுவோர் பலர், இன்றுடன் விட்டுவிடுவேன் என புத்தாண்டு முதல்நாளே மீள ஆரம்பிப்போரும் உள்ளனர்.

ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் புதியத் திட்டங்களைத் தீட்டி, அதனை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவ்வருடம் முழுவதும் உழைக்கும் பலரும் எம்மத்தியில் வாழ்கின்றனர். புதிய இலக்குகளை நோக்கிப் பயணிப்போர் பலர். அந்த கனவையெல்லாம் கடந்த காலங்களில் கொரோனா அலைகளும் பொருளாதார நெருக்கடியும் கொன்று விட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளின் இறுதி நாளன்று, சுயசத்தியம் செய்துகொள்வதற்கான சந்தர்ப்பம் அரிதாகவே இருந்தது. கொரோனா அலை, பொதுவாகவே துன்பங்களைக் கொடுத்துவிட்டது. சிலரை மிக இலகுவாக மேலே தூக்கி நிறுத்திவிட்டது. இன்னும் சிலர் வேலைகளை இழக்கவேண்டிய இருந்தது. பலரும் தொழிலைக் கைவிட்டுவிட்டு, சுயகால்களில் நிற்கவேண்டுமெனத் தீர்மானம் எடுத்தனர்.

எதுவாக இருந்தாலும் கொரோனாவின் புதிய பிறழ்வுகளின் தாக்கம் மெதுவாக தலைதூக்கிக்கொண்டு இருக்கின்றது. முகக்கவசங்களை அணிவதில் தப்பில்லையெனச் சுகாதாரத் துறையினரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஆக “பழைய குருடி கதவை திறடி” என்ற நிலைமைக்குள் மீண்டும் விழுந்து விட்டோம் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

பொருளாதார நெருக்கடியினால், ஒன்றையேனும் கொள்வனவு செய்யமுடியாது. துர்ப்பாக்கிய நிலைமைக்குள் சிக்கியிருப்போர், புத்தம் புதியத் திட்டங்களைத் தீட்டலாம், ஆனால், நடைமுறைக்குச் சாத்தியமாகுமா? பொருளாதார நெருக்கடியால் சிக்கிக்கொள்வோமா? என பலகோணங்களில் சிந்திக்க வேண்டியவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தை தூக்கியெழுப்புவதற்கான முயற்சிகளில் இறங்காமல், மக்கள் மீது சுமையேற்றும் அறிவிப்புகளே விடுக்கப்படுகின்றன. மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும்போது, அவர்கள் மீது மீண்டும் மீண்டும் சுமைகளைச் சுமத்துவதை ஏற்றிக்கொள்ளமுடியாது. தாங்கிக்கொள்கின்றார்கள் என நினைத்து சுமைகளை ஏற்றினால், நிலைமை விபரீதமாகவே முடியும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. எனவே, கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப்பொழுதுக்குள், நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

நன்றி–பருத்தியூர் பாலே. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கடல் உணவுகளை நகரத்திற்கு கொண்டு வரவும்

முல்லைத்தீவு கடலில் பிடிக்கப்படும் கடல் உணவுகள் முல்லைத்தீவு நகர சந்தைக்கு வருவதில்லை என பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

2009க்கு முன்னர் பெருமளவு மீன் முல்லைத்தீவு நகரச் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கும் பொதுமக்கள் தற்போது கள்ளப்பாடு, தீர்த்தக்கரை, சிலாவத்தை ஆகிய பகுதிகளிலிருந்து கூடுதலான கடல் உணவு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் இதன் காரணமாக முல்லைத்தீவு நகரத்தில் கடல் உணவுகளைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நகர மக்களே 02 கிலோமீற்றருக்கு அதிக தூரம் பயணம் செய்து கடல் உணவினை பெற்றுக் கொள்வதாகவும் 1970இல் முல்லைத்தீவு நகரச் சந்தையிலிருந்து பெருமளவு கடல் உணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் தற்போது அந்த நிலைமை காணப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு நகர அபிவிருத்தியில் சந்தையின் வளர்ச்சியும் முக்கியமாக உள்ளதன் காரணமாக முல்லைத்தீவின் கடல் உணவுகள் நகர சந்தைக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். இது தொடர்பாகக் கடந்த காலங்களில் கரைதுறைபற்று பிரதேச சபையில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நடராசா கிருஸ்ணகுமார்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின்–33:

# தமிழரை நடுத்தெருவில் விட்ட சத்தியாகிரகம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1960 டிசெம்பர் 31ஆம் திகதி சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழியாக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு மறுநாளே நடைமுறைக்கு வந்தது. 1961ஆம் ஆண்டு மொழிவாரிச் சிறுபான்மையினருக்கு மிகுந்த சவால்களுடன் தொடங்கியது. இது கல்வித்துறையில் எதிரொலித்தது. 1959 முதலே பல்கலைக்கழகங்கள் சிங்கள, தமிழ் மொழிமூல மாணவர்களை அனுமதித்தன. மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் பொறியியல் ஆகிய பீடங்கள் 1960களில் சேர்க்கப்பட்டன. பல்கலைக்கழகங்களில் இணைவோரின் எண்ணிக்கை வேகமாக வளர்ந்தது. வளாகங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. வித்தியாலங்கார மற்றும் வித்தியோதய பிரவேனாக்கள் பல்கலைக்கழகங்களாக அறிவிக்கப்பட்டன. ஆனால், பற்றாக்குறையான பதவிகளில் சேர்க்கைக்கான போட்டி கடுமையாக இருந்தது. இந்நிலையில், 1961ஆம் ஆண்டு ஒரு தேசிய கல்வி ஆணையம், பௌத்தர்களின் அனுகூலமாகக் குறைபாடுகளை ஈடுசெய்ய, பல்கலைக்கழக அனுமதி மற்றும் பொதுச் சேவைக்கு மத ஒதுக்கீட்டைப் பரிந்துரைத்தது.

இவ்வாறான பல நடவடிக்கைகளின் வழி, மொழிக் கொள்கை மற்றும் கல்வியில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் ஆங்கிலமயமாக்கப்பட்ட, பெரும்பான்மையான கிறிஸ்தவ உயரடுக்கினரை இடமாற்றம் செய்யும் ஒரு புதிய சிங்கள உயரடுக்கை உருவாக்கும் என்று சிங்களப் படித்த பௌத்தர்கள் நம்பத் தூண்டப்பட்டனர். வளர்ந்து வரும் மக்கள்தொகை மற்றும் பின்தங்கிய பொருளாதாரம் ஆகியவற்றால் ஏற்பட்ட வேலையின்மை பிரச்சினையை மொழிப் பிரச்சினைதீவிரப்படுத்தியது. சிங்களத்திலோ அல்லது தமிழிலோ நன்றாகப் படித்த இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தாலும், அவர்களுக்கான எதிர்கால வாய்ப்புகள் எதுவும் காணப்படவில்லை. இந்த விடயத்தை அரசாங்கம் கணிப்பிலெடுக்கத் தவறியது. குறிப்பாகத் தாய்மொழிக் கல்வியின் அறிமுகமும் இலவசக் கல்வியும் சேர்ந்து சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கல்விகற்ற சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை விரைவாக விரிவடையச் செய்தது. இதற்கு வாய்ப்பாகவே பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா 2,500க்கும் மேற்பட்ட தனியார் பாடசாலைகளை தேசியமயமாக்கினார்.

இந்த விடயத்தைத் தமிழரசுக் கட்சி எதிர்த்தது. ஏனெனில் அரசாங்கத்தின் நிதியுதவியுடன், ஏறக்குறைய அனைத்துப் பாடசாலைகளும் இந்து அல்லது கிறிஸ்தவ தனியார் நிர்வாகத்தின் கீழ் இருந்ததால், பாடசாலைகளை தேசியமயமாக்குவது யாழ்ப்பாணத்திற்குக் குறிப்பாக கடுமையான பிரச்சினையாக இருந்தது. இதில் கவனிக்க வேண்டியது யாதெனில், அரசாங்க உதவி பெறும் இலவசக் கல்விப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபோது, அப்பாடசாலை நிர்வாகத்திற்கும் பாடசாலையை அரசாங்க உதவி பெறாத தனியார் பாடசாலையாக நடத்த உரிமை வழங்கப்பட்டது. எனினும், பாடசாலையில் கல்வி பயில்வோரிடம் கட்டணம் வசூலிக்க இயலாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அதன்படி, மதம் சார்பான பாடசாலைகள் விரும்பினால் தமது சமூகத்தினதும் நலன் விரும்பிகளினதும் நிதி ஆதரவுடன் பாடசாலைகளைத் தனியார் பாடசாலைகளாக நடத்தலாம். மத நிறுவனங்கள் பலவும் இதை விரும்பவில்லை.

இந்தப் பின்புலத்தில் சிங்களம் மட்டுமே சட்டத்திற்கு எதிராகத் தமிழரசுக் கட்சி போராடப் போவதாக அறிவித்த நிலையில், அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இப்பேச்சு வார்த்தைகள் தீர்வை நோக்கி நகராது இழுபட்டன. உடனடியாக ஒரு உடன்பாடு எட்டப்படும் வாய்ப்பு இல்லாத நிலையில், அரசாங்கம் சிங்களத்தை நீதிமன்ற மொழியாக அறிவித்ததையடுத்து, தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் தனது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கியது. சட்ட மறுப்புப் போராட்டம் தொடங்குவதாகவே தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருந்தது. குறிப்பாக வடக்குக் கிழக்கில் அரசாங்க நிர்வாக சேவையை இயங்கவியலாமல் செய்வதே திட்டமாக இருந்தது.

இருதரப்புக்கும் இடையில் என்ன பேசப்பட்டன. என்னென்ன விடயங்களில் உடன்பாடு எட்டப்பட்டது, எவற்றில் உடன்பாடு எட்டவில்லை போன்ற விடயங்களை இருதரப்பும் பகிரங்கப்படுத்தவில்லை. பேச்சுவார்த்தைகள் முறிந்ததாக இரு தரப்புக்களும் அறிவிக்காத நிலையில், தமிழரசுக் கட்சி 1961 பெப்ரவரியில் ஒரு போராட்டத்தைத் தொடங்கியதன் மூலம் அதனுடைய நோக்கம் உடனடியான பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அப்பாலானது என்ற எண்ணம் தெற்கில் வலுப்பெற்றது. இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சியின் அரசியல் முதிர்ச்சியின்மை, தென்பகுதியில் தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தின் நியாயங்கள் குறித்த தீராத ஐயங்களுக்கு வழியமைத்தது.

தமிழரசுக் கட்சி தொடங்கிய சத்தியாகிரகப் போராட்டமானது திட்டமிடப்படாததாக இருந்தது என்பது இங்கே முக்கியமானது. யாழ்ப்பாணக் கச்சேரி வாசலில் தொடங்கிய இந்த சத்தியாகிரகப் போராட்டமானது அரச அலுவல்களை நிறுத்தும் நோக்குடையதாயிருந்தது. இப்போராட்டத்தில் கட்சியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். பொதுமக்கள் பார்வையாளர்களாகவே நின்றிருந்தனர். குறித்த சத்தியாகிரகத்தை கலைக்கும் நோக்குடன் பொலிஸார் மேற்கொண்ட வன்முறையைப் பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்களும் சத்தியாகிரகத்துக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் இறங்கினர். இது ஒரு மக்கள் போராட்டமாக விரிவடைந்தது.

முதல்நாள் நிறைவில் தமிழரசுக் கட்சி எதிர்பார்த்த மக்கள் ஆதரவு இப்போராட்டத்திற்குக் கிடைத்தது. அடுத்தடுத்த நாட்களில் பெரும்பான்மையான தமிழர் ஆதரவு இந்தப் போராட்டத்திற்குக் கிடைத்தது. இதை ஒரு மக்கள் போராட்டமாக விரிவுபடுத்தும் நோக்கமோ திட்டமிடலோ தமிழரசுக் கட்சியிடம் இருக்கவில்லை. மாறாக ஒருவித உணர்ச்சியூட்டும் அரசியலே முன்னெடுக்கப்பட்டது. வடக்குக் கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கும் இப்போராட்டம் விரிந்தது.

மட்டக்களப்பில் நடைபெற்ற போராட்டங்களில் ஏராளமான முஸ்லிம்கள் பங்குபற்றினார்கள். குறிப்பாக மட்டக்களப்பு மற்றும் கல்முனை பிரதேசங்களில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து சத்தியாகிரக இயக்கத்தில் இணைந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுமாறு கல்முனை பாராளுமன்ற உறுப்பினர் அஹமட் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பில் வசிக்கும் சிங்கள மக்கள் சத்தியாகிரகப் போராட்டங்களில் தீவிரமாக ஆர்வம் காட்டினர். ஊர்வலங்களில் கலந்துகொண்டு அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். தமிழ் பேசும் சத்தியாகிரகிகளுடன் சேர்ந்து கச்சேரியின் முன் அமர்ந்தனர். சிங்கள சத்தியாகிரகிகள் ‘இருவரும் இலங்கையின் சமமான குடிமக்கள் என்பதால், தங்கள் தமிழ் சகோதரர்களை அவமதிப்பது தங்களை அவமதிப்பதாகும்’ என்று குறிப்பிட்டார்கள். பல பணக்கார சிங்கள குடிமக்கள் சத்தியாகிரகிகளுக்கு மதிய உணவு, பழங்கள் மற்றும் பானங்களுடன் பல நாட்கள் சேவை செய்தனர். இப்போராட்டத்திற்காகப் பெருமளவு நிதியும் வசூலித்திருந்தனர்.

இலங்கையின் கிழக்கில் சத்தியாகிரக போராட்டத்திற்குத் தொடர்ச்சியான ஆதரவு சிங்கள முஸ்லிம் மக்களிடமிருந்து கிடைத்தது. இது குறித்த குறிப்புகளை எஸ். போன்னையாவால் எழுதப்பட்டு 1963ஆம் ஆண்டு வெளியான *Satyagraha and The Freedom Movement of the Tamils in Ceylon* என்ற நூலில் காணலாம். ஏகோபித்த மக்கள் ஆதரவு இப்போராட்டத்திற்கு இருந்தது. ஆனால், இதை எவ்வாறு முன்னகர்த்துவது என்ற திட்டம் தமிழரசுக் கட்சியிடம் இருக்கவில்லை.

காலப்போக்கில் இதற்காக மக்களின் பங்கேற்பு குறைவடையத் தொடங்கியது. ஆனால் கணிசமான அனுதாபம் இருந்தது. அதேவேளை கச்சேரிகளுக்கு வெளியே மறியல் என்பதைத் தவிர வேறு எவ்வித நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. வெகுசன ஆதரவு குறித்து அறிந்திருந்த அரசாங்கம் வன்முறையைப் பயன்படுத்துவதைத் திட்டமிட்டுத் தவிர்த்தது. போராட்டம் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை என்பதையும் அரச பணிகள் மந்தகதியிலேனும் நடப்பதையும் உறுதி செய்த அரசாங்கம் பொறுமை காத்தது.

சத்தியாகிரகப் போராட்டம் நீண்டுகொண்டிருந்தது. இலக்கேதுமற்ற நிலையில், அதன் மக்கள் தளம் குறைவடைவதும் அரசாங்கத்தின் பொறுமையும் தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினருக்குச் சினமூட்டியது. மிகப்பெரிய வெகுமக்கள் போராட்டமாகத் தோற்றம் பெற்ற இப்போராட்டம் மக்கள் பங்குபற்றலின்றி ஊசலாடியது. இந்நிலையை எவ்வாறு தவிர்ப்பது என்ற யோசித்த தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினர், தமிழரசுத் தபால் சேவையைத் தொடங்கி முத்திரைகளை வெளியிட்டனர். இந்த அதிரடி நடவடிக்கை மக்களை உணர்ச்சிகரமாக மீண்டும் ஒன்றிணைக்கும் என்று எதிர்பார்த்தனர்.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் நடைபெற்ற போராட்டத்திற்கான தமிழ் மக்களின் வெகுசன ஆதரவு அரசுக்கு மிகப்பெரிய தடையாக இருந்தது. போராட்டத்தை ஒடுக்கவியலாமல் போனதற்கு அதனது பரந்துபட்ட மக்கள் ஆதரவு முக்கிய காரணம். தபால்தலை வெளியீடானது அரசு எதிர்பார்த்த வாய்ப்பை வழங்கியது. தமிழரசுக் கட்சியின் நோக்கம் ‘பிரிவினையன்றி மொழியுரிமை அல்ல’ என்ற பிரச்சாரத்தை அரசாங்கம் தொடங்கியது. அவசரக்கால நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிற தலைவர்களும் உட்பட சத்தியாகிரகத்தில் பங்கு கொண்ட நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். அவர்களில், செல்வநாயகம் தனது வீட்டிலும் பிறர் பனாகொடையில் புதிதாகக் கட்டப்பட்ட இராணுவ முகாமிலும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். எல்லாம் முடிந்து போனது.

### ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் கெளும் சேனநாயக்க

# நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமனம்



ஆர்பிகோ இன்சூர்னஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பிரதம அதிகாரியும், இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் புகழ்பெற்ற நபருமான கலாநிதி. கெளும் சேனநாயக்க, நிறுவனத்தின் நிறைவேற்று, சுயாதீனமற்ற பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி எனும் பொறுப்பை கலாநிதி. சேனநாயக்க ஏற்றார். காப்புறுதித் துறையில் இவர் 40 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். 133 நாட்களில் இலங்கையில் Million Dollar Round Table (MDRT) அந்தஸ்தை எய்திய, இலங்கையின் காப்புறுதித் துறையில் இந்த அந்தஸ்தைக் கொண்டுள்ள முதலாவதும் ஒரே பிரதம நிறைவேற்று அதிகாரி எனும் பெருமையையும் இவர் கொண்டுள்ளார். ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி/ பிரதம அதிகாரி எனும் பொறுப்புகளுக்கு அப்பால் இவர் ரிச்சர்ட் பீரிஸ் டிஸ்ரிபியுட்டர்ஸ் மற்றும் ரிச்சர்ட் பீரிஸ் ஃபினான்ஸ் கம்பனி ஆகியவற்றின் பணிப்பாளர் சபையில் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.

1982ஆம் ஆண்டு மேர்கன்டைல் கிரெடிட் லிமிடெட் நிறுவனத்தில் தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதம முகவராக தமது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த இவர், யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தில் இணைந்து, 27 வருட காலப்பகுதியில் உதவி பொது முகாமையாளர் எனும் நிலைக்கு உயர்ந்திருந்தார். அதனைத் தொடர்ந்து, AIA இன்சூரன்ஸ் நிறுவனத்தில் செயற்பாடுகளுக்கான பொது முகாமையாளராக இணைந்து கொண்டதுடன், அங்கு கடமையாற்றிய ஒரு தசாப்த காலப்பகுதியில், செயற்பாடுகளுக்கான பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார்.

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் தவிசாளர் ரமல் ஜாசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “எமது பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. கெளும், நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளமை உண்மையில் எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தொழிற்துறைக்கும் நிறுவனத்துக்கும் இவர் ஆற்றும் பங்களிப்பு என்பது வரவேற்கத்தக்கதுடன், நிறுவனத்தை உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு செல்லும் வகையில் இவரின் மூலோபாய தூரநோக்குடைய செயற்பாடுகள் அமைந்திருக்கும்” என்றார்.

கலாநிதி. கெளும் சேனநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி போன்ற புகழ்பெற்ற நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளமை உண்மையில் பெருமையாக உள்ளது. துரித, நிலைபேறான வளர்ச்சி, சவால்கள் மற்றும் சிக்கல்கள் நிறைந்த சூழலில் நாம் இயங்குவது தொடர்பில் தூர நோக்குடைய திட்டங்களை நாம் கொண்டுள்ளோம்.” என்றார்.

தமது தொழில் வாழ்க்கையில், Munich Re, Hannover Re மற்றும் Reinsurance Group of America (RGA) போன்ற சர்வதேச மீள் காப்புறுதி நிறுவனங்களுடன் உறுதியான உறவுகளை இவர் கட்டியெழுப்பியுள்ளதுடன், உயர்மட்ட மூலோபாய மற்றும் செயற்பாட்டு நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளார். புதிய வியாபாரங்களுக்கு காப்புறுதி வழங்கல், காப்புறுதிதாரருக்கு சேவையாற்றல், உரிமைகோரல்கள், குழும ஆயுள் காப்புறுதி வழங்கல்கள், மீள்காப்புறுதி, தொடர்பு நிலையங்கள், வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் பல்வேறு முக்கிய பிரிவுகளை கட்டியெழுப்புவது மற்றும் செயற்பாடுகளை நிர்வகிப்பது தொடர்பில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளார்.

கொழும்பு ஆனந்த கல்லூரியின் பழைய மாணவரான கலாநிதி. சேனநாயக்க, Worldview Institute இலிருந்து வணிக முகாமைத்துவ டிப்ளோமாவைப் பெற்றுள்ளார். அத்துடன், அவுஸ்திரேலியா, University of Western Sydney இல் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். காப்புறுதித் துறைக்கு இவர் ஆற்றியுள்ள பங்களிப்பையும், இவரின் சாதனைகளையும் கௌரவித்து London University of Peace இனால் இவருக்கு வணிக முகாமைத்துவ கலாநிதிப் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஐக்கிய இராஜ்ஜியம், ஜேர்மனி, ஜப்பான், சிங்கப்பூர், ஹொங் கொங், மலேசியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் காப்புறுதி பயிற்சிகளைப் பெற்றுள்ளதுடன், தமது தொழில் வாழ்க்கையில் 20,000க்கும் அதிகமான காப்புறுதி நிபுணர்களுக்கு இவர் பயிற்சிகளையும் வழங்கியுள்ளார்.

### பவர் விவசாயத் துறையில்

# சுப்பர் யூரியாவை பயன்படுத்துகின்றது




இலங்கையின் விவசாயத் துறையுடன் தொடர்புடைய வர்த்தக நாமமான பவர் என அறியப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், 2018ஆம் ஆண்டில் சுப்பர் யூரியாவை பயன்படுத்தும் செயற்பாடுகளை ஆரம்பித்தது. பயன்படுத்தும் மண்ணில் அமோனியா ஆவியாதல் மற்றும் நைதரசன் உரத்தின் நைதரசனாக்கம் ஆகியவற்றை தணிக்கும் இரட்டை நைதரசன் உறுதியாக்கியாக இந்த உரம் அமைந்துள்ளது. இந்த உறுதியாக்கியினூடாக, நைதரசன் உரப் பாவனையின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதுடன், நைதரசன் இழப்பை குறைத்து, விளைச்சலை மேம்படுத்தி, சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பதாகவும் அமைந்துள்ளது.

அன்று முதல், புகழ்பெற்ற விவசாய நிபுணர்கள் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் நிபுணர்கள் மற்றும் இலங்கை விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் பவர் இணைந்து சுப்பர் யூரியா பயன்பாட்டை மாதிரியாக பயிர்களில் முன்னெடுத்திருந்தது. நைதரசன் உறுதியாக்கிகளின் வினைத்திறன் வெற்றிகரமாக அமைந்திருந்ததை தொடர்ந்து, மண் வகை, காலநிலை மற்றும் பயிர் வகை ஆகிய காரணிகளால் உந்துதல் அளிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்தும், சுப்பர் யூரியாவை வணிக ரீதியில் விற்பனை செய்ய முன்வந்துள்ளதாக பவர் அண்மையில் அறிவித்திருந்தது.

ஐக்கிய நாடுகள் சூழல் நிகழ்ச்சித் திட்டத்துடன் 2019 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்படுத்திக் கொண்ட பங்காண்மையின் பிரகாரம், வாழ்க்கைக்கான நைதரசன் எனும் கொழும்பு பிரகடனத்தை பின்பற்ற ஆரம்பித்தது. 2030ஆம் ஆண்டளவில் நைதரசன் கழிவை அரை மடங்காக குறைக்கும் வழிமுறையை 15 அங்கத்துவ நாடுகள் பின்பற்றுவது தொடர்பில் இந்த பங்காண்மையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாவது ஐக்கிய நாடுகள் சூழல் ஒன்றுகூடலில், புவியில் நிலைபேறான வகையில் நைதரசன் பயன்பாட்டை மேற்கொள்வது தொடர்பான “நிலைபேறான நைதரசன் முகாமைத்துவத்துக்கான உறுதிமொழி” எனும் சர்வதேச நைதரசன் நிர்வாக கட்டமைப்பு (INMS) இன் ஆதரவுடன் இலங்கை இந்த நிலைப்பாட்டை மேலும் உறுதி செய்திருந்தது.

உலகளாவிய பொருளாதார ரீதியில் நைதரசன் பாவனை என்பது சிக்கனமற்றதாக அமைந்துள்ளது. பெருமளவான பகுதி சூழலில் வெளியிடப்படுகின்றது. தற்போதைய தவறான முகாமைத்துவம் மற்றும் அளவுக்கதிகமாக நைதரசன் பயன்பாடு ஆகியன பூமி, நீர், உயிரியல் பரம்பல், மனித சுகாதாரம் மற்றும் வளி ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுடன், மோசமான காலநிலை மாற்றங்களையும் தோற்றுவிக்கும்.

தாவரங்களினால் பயன்படுத்தக்கூடிய வகையில் நைதரசனை அம்மோனியம் முறையில் நீண்ட காலம் சேமித்து வைக்கக்கூடியதாக சுப்பர் யூரியா அமைந்துள்ளது. நைதரசன் பாவனையை வினைத்திறனாக பயன்படுத்துவதையும், நைதரசன் கசிவடையும் இடரை தணிக்கும் வகையிலும் இது அமைந்துள்ளது. நைதரசன் உரத்தை பயன்படுத்துவது, சூழல் தாக்கத்தைத் குறைப்பது மற்றும் நிலைபேறான விவசாய செயற்பாடுகளை ஊக்குவிப்பது போன்றவற்றை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது.

2021ஆம் ஆண்டில் இலங்கையில் இரசாயன உரம் மற்றும் களைநாசினிகள் பயன்பாட்டை தடை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்தை தொடர்ந்து, முன்னணி ஆய்வு நிலையங்கள் மற்றும் பரந்தளவு துறைசார் பங்காளர்களுடன் இணைந்து சிறப்பு நிலையத்தை பவர் நிறுவியுள்ளது. இலங்கையில் சேதன மற்றும் நிலைபேறான விவசாயத் துறையில் புகழ்பெற்ற விஞ்ஞான நிபுணத்துவ அமைப்பாக இது அறியப்படுகின்றது.



## பேரன்பே...நீ

முற்றுமுழுதாக நிரப்பிக்கொள்ள
முடியாத பேரன்பின் சாட்சியம் நீ...
பெருக்கெடுத்து பாய்ந்து செல்லும்
நதியின் பேராற்றல் நீ...
புயலென சூறாவளியென
இடிமின்னலென
பருவம் மாறிக்கொள்ளும்
பேருணர்வு நீ...
பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த
பிணைப்பும் நீயே
ஆதலால் கொஞ்சம்
சிரித்திரு மகிழ்ந்திரு
குதூகலித்திரு போதும்...



அஷ்வினிவையந்தி



## காத்திருப்பு

அலறி துணையின்றி
காலை விழிக்கவே
தவறியநேரம்
கண்களில் தெரியவே

அவசரப்பயணம்
குளியல் அறையிலே
வழலையோடு
போர்கள் தொடுக்கவே

நேரம் தாமதிப்பது
புத்தி உணர்த்தவே
பிடித்த ஆடை
மேனிதழுவவே

கைகள் இயங்குது
கண்ணாடி முன்னே
கால்கள் விரையுது
வீட்டின் வெளியே

வேகமாய் பறக்குதுவண்டி
வானில் மிதகுது நெஞ்சு
வழி மறித்ததோழன்
சொன்னான் அச்செய்தி

“மச்சான் உன் ஆளு
இன்றைக்குவரலியாம் டா"

தவறிய எதிர்பார்ப்பில்
தடுமாறியது உள்ளம்
விழி ஆற்றியது வெள்ளம்



க. கேஷானிதினுஷிகா
கொழும்பு



## சுனாமி தந்த சுவடுகள்

ஆறாதவடுக்களாய்
அனைவர் நெஞ்சங்களிலும்
சுனாமியின் ரணங்கள்
மாறாது மறைந்து போகாது
எம் மனதைவிட்டு

கலியாய் வந்த சுனாமி
மக்களை கரை புரண்டோட வைத்தது
பலியாய் எடுத்துக் கொண்டது
பல்லாயிரக் கணக்கான ஆன்மாக்களை

வடக்கென்ன கிழக்கென்ன
கரையோரப் பகுதிகள் அனைத்தையும்
அடக்கி தன்னத்தே எடுத்துக் கொண்டது
ஆழிப்பேரலை

நீரும் நிலமும் நடத்திய
வன்முறையில் உலகின்
ஊரும் உயிர்களும்
நிசமாய் கல்லறையான நாள்

கொத்துக் கொத்தாய் மனித
உயிர்கள் மாண்டுபோக
பித்துப் பிடித்தவர்களாய்
சொந்தபந்தங்கள் கண்ணீரோடு

முட்டிமோதி நடந்தேறிய
சுனாமியின் சம்பவங்கள்
கடலலையின்
கொட்டத்தைக்கூட
கடவுளுக்கும் அடக்கமுடியவில்லை

கறையாகப் படிந்த இரண்டாயிரத்து நான்கு
சுனாமியின் சம்பவங்கள்
மறையாது ஒருபோதும்
மனதைவிட்டு அகலாத சுடுகளாய்

மனம் ஆற்றுப்படவில்லை
இயற்கையின் சீற்றம் கண்டு
தினம் தினம் வந்துபோகின்றது
இரையாகிய உயிர்களின் நினைவலைகள்

நெஞ்சம் பதைபதைக்க
எமைவிட்டுப் பிரிந்த உறவுகளை
நினைவுகூர்ந்து
அஞ்லித்துநிற்கின்றேன்
அவர்களின் ஆத்ம சாந்திக்காய்

சம்பூரணி
சுஜந்தினியுவராஜா





## பருவம்

கிட்டத்தில்
வாசிக்கபார்வை
எங்கோ
ஓடிவிட்டது...

மூக்கு
கண்ணாடியை!
பொறுத்தருள்
கண்ணுக்கு தேடுகிறேன் ...

எந்தவீதம்
குறையுள்ளது
அதற்கு
தள்ளுபடி கேக்கிறேன்...

இதுதான்
விலையென்றான்
இதற்குமேல்
வேறு கடை!

வயசான பின்னும்!
புத்தி
தெளியவில்லை
நக்கலா ஒத்தக் குரல்

ஆமா! ஆமா!
தம்பி
சம்பளத்தில்
சேமித்தகாசு!

எப்படி மனசுவரும்
அள்ளிக்கொடுக்க
அதுதான் பேரம்...

இன்னும் கொஞ்சநாள்
பொறுத்திரு
என்போல் நீயும்!...

என்றெண்ணி
சட்டைப்பை காசுகளை
எண்ணியபடி
அடுத்த கடைதேடினேன் ...



புது.பிரகாஷ்





# விஜயராஜ் எனும் விஜயகாந்த்

சினிமா, அரசியல் என முன்னணி துறைகளில் தவிர்க்க முடியாத பல சாதனைகளைச் செய்தவர் விஜயகாந்த். புரட்சிக் கலைஞராக திரைத்துறையில் இலட்சக்கணக்கான ரசிகர் பட்டாளத்தைச் சம்பாதித்தவர், கேப்டனாக தமிழக அரசியல் களத்திலும் புகுந்து கோடிக்கணக்கான மக்கள் மனதிலும் நீங்கா இடம் பிடித்தவர்.

'விஜயகாந்த்' - மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952ஆம் ஆண்டு, ஒகஸ்ட் 25ஆம் திகதி அழகர்சாமி - ஆண்டாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். சிறுவயது முதலே பள்ளிப்படிப்பை விட, சினிமா மீதான பிடிப்பே விஜயகாந்த்தை ஊட்டிவளர்க்க பத்தாம் வகுப்போடு நின்று போனது அவர் படிப்பு. அதன்பிறகு, கீரைத்துரையிலுள்ள தனது தந்தையின் அரிசி ஆலையில் வேலை செய்தவர், தனது நண்பர்களின் உந்துதலால் சினிமாவில் நடிப்பதற்கு வாய்ப்பு கேட்டு சென்னைக்கு இடம்பெயர்ந்தார். பல்வேறு, அவமானங்கள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில், 1979ஆம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான 'இனிக்கும் இளமை' படத்தில் நடிகனாகத் தனது திரைப்பயணத்தை தொடங்கினார்.

தொடர்ந்து, 'சட்டம் ஒரு இருட்டறை', 'தூரத்து இடிமுழக்கம்', 'உழவன் மகன்', 'சிவப்பு மல்லி' என வெற்றிப்படங்களைக் கொடுத்து தமிழின் முன்னணிக் கதாநாயகனாக வலம்வந்தார். கிட்டத்தட்ட 150க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த விஜயகாந்த், 1984இல் மட்டும் ஒரே ஆண்டில் 18 படங்களில் நடித்து சினிமாத்துறையில் வரலாற்றுச் சாதனை புரிந்தார். புரட்சிக் கலைஞர் என்ற பட்டத்துடன் தனது 100ஆவது படமான 'கேப்டன் பிரபாகரன்' படத்திலிருந்து கேப்டன் என்ற அடைமொழியும் அவருக்கு சேர்ந்துகொண்டது.

விஜயகாந்த்தின் திறமையும், குணாதிசயமும் அவரை 1999ஆம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராக்கியது.

பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்கக் கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திரக் கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார். மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்வதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து, பெரும் தொகையை வங்கியில் டெபாசிட் செய்தார். 2002ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்சினை உச்சத்திலிருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து 'நீர் தராத கர்நாடகாவுக்கு மின்சாரம் இல்லை!' என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலியில் நடத்தினார். ஏற்கெனவே நடிகராக இருந்தபோதே, 1984, 1986 ஆண்டுகளில் ஈழத்தமிழர்களுக்காகப் பல உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தியிருக்கிறார் விஜயகாந்த்.

இவைதவிர, சினிமாத்துறையில் இருக்கும்போது, அரசியல் வாசனை தெரியாதபோதே, பல பொதுநல சேவைகளையும் செய்துவந்தார் விஜயகாந்த். 1989இல் ஈரோட்டில் இலவச மருத்துவமனை, சென்னை சாலிகிராமத்தில் இலவச மருத்துவமனை, ஆண்டுதோறும் பாடசாலை மாணவர்களுக்கு இலட்சக்கணக்கில் கல்வி நிதியுதவி, எம்.ஜி.ஆர் காது கேளாதோர்-வாய் பேசாதோர் பாடசாலை, லிட்டில் ஃபிளவர் பார்வையற்றோர் பாடசாலைகளுக்கு நன்கொடை, தமிழகம் முழுவதும் 60 இடங்களில் இலவச கணினிப் பயிற்சி மையம், இலவச திருமண மண்டபங்கள், ஏராளமான ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம், கேப்டன் ஸ்போர்ட்ஸ் அகாடமி எனக் கலக்கினார். குஜராத் பூகம்பம், கார்கில் போர், சுனாமி, கும்பகோணம் பள்ளி தீ விபத்து எனப் பல சோக நிகழ்வுகளுக்குத் தன் சொந்தச் செலவில் நிவாரணங்களைக் கொடுத்து உதவினார்.

இந்த நிலையில்தான், 2000ஆம் ஆண்டு, பெப்ரவரி 12இல் தனது ரசிகர் மன்றத்துக்கென தனிக்கொடியை அறிமுகப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, 2001ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் பல்வேறு இடங்களில் சுயேச்சையாகப் போட்டியிட்டு, பலர் வெற்றியும் அடைந்தனர். தொடர்ந்து, 2005ஆம் ஆண்டு, செப்டம்பர் 14ஆம் திகதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி, "தேசிய முற்போக்கு திராவிட கழகம்" எனும் அரசியல் கட்சியைத் தொடங்கினார் விஜயகாந்த். கட்சி ஆரம்பித்து ஓராண்டு நிறைவடையாத நிலையில், 2006ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர், தான் போட்டியிட்ட விருத்தாசலம் தொகுதியில் அமோக வெற்றிபெற்றார். மற்ற வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் கணிசமான வாக்குகளைப் பெற்று, தே.மு.தி.கவுக்கு 8.4 சதவிகித வாக்குகளைப் பெற்றுத்தந்தனர். அதைத் தொடர்ந்து, 2009இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் தனித்து நின்று, தோல்வியைத் தழுவினாலும் 10 சதவிகித வாக்குகளை தே.மு.தி.க பெற்றது.



தனித்தே போட்டியிட்டுவந்த நிலையில், முதன்முறையாக 2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துத் தேர்தலைச் சந்தித்த விஜயகாந்த், 29 இடங்களில் வெற்றிபெற்று தி.மு.கவையே பின்னுக்குத் தள்ளி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார். அதன்பிறகு அரசியலிலும் விஜயகாந்த்தின் உடல்நிலையிலும் இறங்குமுகம்தான் ஏற்பட்டது. 2014 பாராளுமன்றத் தேர்தல், 2016 சட்டமன்றத் தேர்தல், 2019 பாராளுமன்றத் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல் வரை விஜயகாந்த்தின் தே.மு.தி.க படுதோல்வியைச் சந்தித்தது. அதேபோல, 2021 தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க முடியாத அளவுக்கு விஜயகாந்த்தின் உடல்நிலையும் சோர்வடைந்தது. தொடர்ந்து மருத்துவச் சிகிச்சைகள் எடுத்து வந்தார்.

இந்த நிலையில்தான், கடந்த மாதம் 18ஆம் திகதி திடீர் உடல்நலக்குறைவு காரணமாகச் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள மியாட் வைத்தியசாலையில் விஜயகாந்த் அனுமதிக்கப்பட்டார். வழக்கமான மருத்துவ பரிசோதனைதான், ஓரிரு நாட்களில் வீடு திரும்புவார் என தே.மு.தி.க தலைமை கழகம் தெரிவித்து வந்தநிலையில், 29-11-2023 அன்று மியாட் மருத்துவமனை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியது. "விஜயகாந்த்தின் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. எனினும் கடந்த 24 மணி நேரத்தில் அவரது உடல்நிலை சீராக இல்லாததால், அவருக்கு நுரையீரல் சிகிச்சைக்கான உதவி தேவைப்படுகிறது. அவர் விரைவில் பூரண உடல்நலம் பெறுவார் என்று நம்புகிறோம். அவருக்கு இன்னும் 14 நாள்கள் வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது" என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. எனினும் அதிலிருந்து மீண்டு வந்த விஜயகாந்த் வீடு திரும்பினார்.

அவர் வீடு திரும்பிய பிறகு, தே.மு.தி.க தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் குறித்த அறிவிப்பு வெளியானது. அதன்படி, கடந்த 14ஆம் திகதி நடந்த கட்சிப் பொதுக்குழுக் கூட்டத்தில், விஜயகாந்த் முன்னிலையில் பொதுச்செயலாளராக பிரேமலதா அறிவிக்கப்பட்டார். பின்னர் விஜயகாந்த்தின் காலில் விழுந்து ஆசியும் பெற்றார். இந்த நிலையில், மீண்டும் உடல்நலக்குறைவால் விஜயகாந்த் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் தான் அந்த துயர செய்தி மருத்துவமனை அறிக்கை வழியாக வந்தது. உடல்நிலை சீரற்ற நிலையில், மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்த்துக்கு நிமோனியா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. ஏற்கெனவே நுரையீரல் தொற்று இருந்த நிலையில், அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருந்தது. அதனால், அவருக்கு வெண்டிலேட்டர் பொருத்தி தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்தார்" எனக் குறிப்பிட்டிருக்கிறது.











## நூற்றாண்டு விழா

பதுளை-குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா, வித்தியாலயல மண்டபத்தில் புதன்கிழமை (27) நடைபெற்றது. அதில், சிறப்பு அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கலந்துகொண்டார்.

## கௌரவிப்பு நிகழ்வு

பொகவந்தலாவ-கெர்க்கஸ்வோல்ட் இல-02 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌவிரவிக்கும் நிகழ்வை, பழைய மாணவர்களும் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் இணைந்து நடத்தினர். இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டதோடு, மற்றும் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களான ஏ.அருளாநத்தன், சுந்தரேசன் பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

எஸ்.சதீஸ்















## சர்வதேச அரபு மொழி தினம்

சர்வதேச அரபு மொழி தின விழா பேருவளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் அதிபர் இப்ராஹீம் தலைமையில் வெள்ளிக்கிழமை (22) நடைபெற்றது.

இவ்விழாவில் விஷேட அதிதியாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலை அபிவிருத்திப் பகுதியின் பணிப்பாளர் நிஸாமுதீன் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அதிகாரி அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.முப்தி மற்றும் வை.எம்.எம்.ஏ உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை உறுப்பினர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் உட்பட களுத்துறை மாவட்ட பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.ஸாகிர்

## முப்பெரும் விழாக்கள்

மட்டக்களப்பு-காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தர பாடசாலையின் பாடசாலையின் 95 ஆண்டு நிறைவு, பரிசளிப்பு, ஆசிரியர் கௌரவிப்பு விழாக்கள் என முப்பெரும் விழாக்கள் காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் வியாழக்கிழமை (28) நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ஜெசீமா முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

எம்.எஸ்.எம்.நூர்தீன்





## ஒளி விழா நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனத்தின் ஒளி விழா நிகழ்வு மட்டக்களப்பு YMCA மண்டபத்தில் நிறுவனத்தின் தலைவர் து.தேவரதர்ஷன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றது. இவ்விழாவில் பாடசாலை செல்லும் செவிப்புலனற்றோர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, இந்த கற்றல் உபகரணங்களை வர்த்தகர்கள் அரச/அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் வங்கிகள், நலன் விரும்பிகள் ஆகியோர் நன்கொடையாக வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம்.நூர்தீன்







# கண்ணீர் கடலில் மிதக்கும் தமிழகம்



### பிரதமர் மோடி புகழஞ்சலி

"விஜயகாந்த் மறைவு செய்தி கேட்டு மிகுந்த துயரம் அடைந்தேன். தமிழ் சினிமாவின் ஆளுமைகளின் ஒருவரான விஜயகாந்த் தனது சிறந்த நடிப்பின் மூலம் கோடிக்கணக்கான இதயங்களை கவர்ந்துள்ளார். அரசியல் தலைவராக தமிழக அரசியலில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். அவரது மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளது" என இந்திய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.



### முழு அரசு மரியாதை வழங்கப்படும்

தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தே.மு.தி.க) நிறுவனத் தலைவர் விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் மு.கா.ஸ்டாலின், விஜயகாந்த் இறுதிப் பயணத்துக்கு முழு அரசு மரியாதை வழங்கப்படும் என்றார்.



### "சிறந்த மனிதநேயவாதி"

"சிறந்த நடிகரும், அர்ப்பணிப்புள்ள தலைவரும், சிறந்த மனிதநேயவாதியுமான விஜயகாந்த் அவர்களின் மறைவு வேதனை அளிக்கிறது. சினிமா, அரசியல், சமூக சேவை ஆகியவற்றில் அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பு என்றும் நினைவுகூரப்படும்" தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி இரங்கல் தெரிவித்துள்ளார்.



### "தமிழ்நாட்டுக்கு பேரிழப்பு"

விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் (மதிமுக) பொதுச்செயலாளர் வைகோ, அவரின் மறைவு தமிழ்நாட்டுக்கு பேரிழப்பு என்றும் தெரிவித்துள்ளார்.



### "பொன்மன வள்ளல்"

"மதிப்பிற்குரிய கேப்டன் விஜயகாந்த் மறைவுக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தேமுதிக நிறுவனர் விஜயகாந்த்தை 'பசிப்பிணி தீர்த்த பொன்மன வள்ளல்' என்று அஞ்சலி செலுத்துவோம் என தெரிவித்துள்ளார்.



### "ஓர் அற்புதமான மனிதர்"

விஜயகாந்த் ஓர் அற்புதமான மனிதர், அனைவரையும் சமமாக மதித்தவர். அவரது இழப்பு இந்திய அரசியலுக்கும் சினிமாத்துறைக்கும் மிகப்பெரிய பேரிழப்பாகும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) தலைவர் அன்புமணி ராமதாஸ் அவருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.



### "பசிப்பிணி போக்கிய மாமனிதர்"

தென்தமிழகத்தில் பிறந்து, தென்னிந்தியத் திரையுலகையே கட்டியாண்ட பெருமைக்குரியவர். ஏழை எளிய தொழிலாளர்களின் பசிப்பிணி போக்கிய மாமனிதர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பேரன்பைப் பெற்ற அற்புதமான கலைஞர் என்று தமிழக பாரதிய ஜனதா கட்சியின் (பாஜக) தலைவர் அண்ணாமலை இரங்கல் தெரிவித்துள்ளார்.



### "இளைப்பாற பிரார்த்திக்கிறேன்"

பொதுவாழ்விலும், கலைத்துறையிலும் செயற்கரிய பல செயல்கள் செய்துள்ள, மக்களால் அன்போடு கேப்டன் என்று அழைக்கப்படும் விஜயகாந்த் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன்" என அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.



### "இலங்கை மக்கள் மீது அதீத அன்பு கொண்டவர்"

எவருக்கும் அஞ்சாது மக்களுக்காக உடனுக்குடன் சேவையை செய்யும் அரசியல் தலைவன். தமிழகம் செல்லும்போதெல்லாம் அவரை சந்தித்து உரையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். அவர், இலங்கை மக்கள் மீது அதீத அன்பு கொண்டவர். இலங்கையில் உள்ள பாமர மக்களுக்காக விளம்பரமற்ற பல உதவிகளை செய்துள்ளார். இவர் பாமர மக்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் ஈடு இணையற்றவர். இவருடைய இழப்பு தமிழக மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். என கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### காசா மக்களுக்கு

# தற்காலிக விசா



ஹமாஸ் மீது போர் பிரகடனம் செய்து இஸ்ரேல் இராணுவம் காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. வடக்கு காசாவைத் தொடர்ந்து தெற்கு காசாவிலும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. வடக்கு காசா ஏறக்குறைய முற்றிலும் சிதைந்த நிலையில், காணப்படுகிறது. தெற்குப் பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகரில் பலத்த சண்டை நடைபெற்று வருகிறது.

இதனால் பலஸ்தீன மக்கள் கடும் சோதனையை சந்தித்து வருகின்றனர். தங்குவதற்கு இடமில்லாமல், அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் அல்லாடி வருகின்றனர்.

இந்நிலையில், "கனடா நாட்டினரின் உறவினர்கள் காசா பகுதியில் இருந்து, எங்கள் நாட்டில் குடியேற தற்காலிக விசாக்களுக்கு விண்ணப்பிக்கலாம்" என கனடா தெரிவித்துள்ளது. ஆனால், "இஸ்ரேல் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட காசாவில் இருந்து வெளியேற நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது" எனத் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் ஜனவரி 9ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என எதிர்பார்ப்பதாக அந்நாட்டின் குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

தற்போது வரை 660 கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள், நிரந்தமாக வசித்து வருபவர்கள், அவர்களுடைய மனைவிகள் மற்றும் குழந்தைகளை காசாவில் இருந்து அழைத்து வர அரசு கவனம் செலுத்துகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

கனடாவை சேர்ந்தவர்களுடைய பெற்றோர்கள், குழந்தைகள், பேரக்குழந்தைகள் போன்றோரின் தகுதியுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்புடையதாக இருந்தால் மூன்று வருடங்கள் விசா வழங்கப்படும்.

இதனால் எத்தனை பேர் கனடாவிற்கு வருவார்கள் எனத் தெரியாது. ஆனால், நூற்றுக்கணக்கில் இருக்க வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையில், கனடாவைச் சேர்ந்தவர்களை காசாவில் இருந்து வெளியேற்றுவது மிகவும் கடினமானது என்றார்.




# MH370 விமானத்தை கண்டுபிடிக்க புது திட்டம்

கடந்த 2014, மார்ச் 8ஆம் திகதி கோலா லம்பூரில் இருந்து மலேசியா நோக்கி புறப்பட்ட எம்.எச்.370 என்ற விமானம் ரேடார்களில் இருந்து காணாமல் போனது. ரேடார்களில் இருந்து மாயமான எம்.எச். 370 விமானம் எங்கு சென்றது, அதில் இருந்தவர்கள் நிலை என்ன என்ற கேள்விகளுக்கு இதுவரை பதில் இல்லை.

கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக காணாமல்போயிருக்கும் மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் 370-ஐ கண்டுபிடிக்க புது திட்டம் உள்ளதாக ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

லண்டனில் உள்ள ரோயல் ஏரோனாடிக்கல் சொசைட்டியில் நடைபெற்ற விரிவுரையில் புதிய வகை தேடலின் மூலம் 10 நாட்களில் காணாமல்போன விமானத்தை கண்டுபிடிக்க முடியும் என்று வான்வெளி துறை நிபுணர்கள் ஜீன்-லுக் மார்சண்ட் மற்றும் விமானியான பேட்ரிக் பெல்லி தெரிவித்தனர்.

"நாங்கள் முறையான திட்டமிடல்களை மேற்கொண்டுள்ளோம். எங்களிடம் திட்டம் உள்ளது. இந்த பகுதி மிகவும் சிறியது, புதிய வகை வழிமுறைகளை கையாளும் போது 10 நாட்கள் வரை ஆகலாம். ஆனால், இது விரைவில் நிறைவுபெறும் வகையில் இருக்கும். எம்.எச். 370 பாகங்கள் கண்டுபிடிக்கும் வரை, அதற்கு என்ன ஆனது என்பது யாருக்கும் தெரியாது" என ஜீன்-லுக் மார்சண்ட் தெரிவித்தார்.

அமெரிக்கா

### டிரம்புக்கு எதிராக தீர்ப்பளித்த

# நீதிபதிகளுக்கு மிரட்டல்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புக்கு எதிரான பாராளுமன்ற வன்முறை வழக்கில் தீர்ப்பளித்த கொலராடோ மாகாண நீதிமன்றம் அவர் ஜனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என்று கூறியது. மேலும், கொலராடோ மாகாணத்தில் அவருடைய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் டிரம்ப் பெயர் இடம்பெறாது. அப்படி இடம்பெற்றிருந்தால் வாக்குகள் எண்ணப்படாது என்று தெரிவித்திருந்தது.

இந்நிலையில், டிரம்புக்கு எதிராக தீர்ப்பளித்த நீதிபதிகளுக்கு மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, நீதிபதிகள் வீடுகளுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் வீடுகளை சுற்றி கண்காணிப்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆனால், தனிப்பட்ட பாதுகாப்பை கருத்தில் கொண்டு விசாரணை குறித்த விளக்கத்தை அவர்கள் வெளியிடவில்லை.






### அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் பாகிஸ்தான் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மெல்பேணில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பாகிஸ்தான், குறிபிட்ட நேரத்தின் பின்னர் மொஹமட் றிஸ்வானை அணித்தலைவர் பற் கமின்ஸிடம் இழந்தது. தொடர்ந்து சிறிது நேரத்தில் 21 ஓட்டங்களுடன் ஷகீன் ஷா அஃப்ரிடியை நேதன் லையனிடம் இழந்தது.

இதையடுத்து ஹஸன் அலி கமின்ஸிடம் வீழ்ந்ததோடு, மிர் ஹம்ஸா லையனிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து 264 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் பாகிஸ்தான் பெற்றது.

ஆமீர் ஜமால் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஷகீன் ஷா அப்ரிடி (2), மிர் ஹம்ஸாவிடம் (2) உஸ்மான் கவாஜா, மர்னுஸ் லபுஷேன், டேவிட் வோர்னர், ட்ரெவிஸ் ஹெட்டை இழந்து தடுமாறியது.

இந்நிலையில், இதன் பின்னர் ஜோடி சேர்ந்த மிற்செல் மார்ஷும், ஸ்டீவ் ஸ்மித்தும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 96 ஓட்டங்களுடன் ஹம்ஸாவிடம் மார்ஷ் வீழ்ந்தார். தொடர்ந்து ஸ்மித்தும் 50 ஓட்டங்களுடன் அஃப்ரிடியிடம் விழ நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் தமது இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றுள்ள அவுஸ்திரேலியா 241 ஓட்டங்கள் முன்னிலையிலுள்ளது. களத்தில் அலெக்ஸ் காரி 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளார்.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# எவெர்ற்றனை வீழ்த்திய சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாக, பில் பொடென், ஜூலியன் அல்வரேஸ், பெர்ணார்டோ சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜக் ஹரிஸன் பெற்றிருந்தார்.

# கராத்தேயில் அஸாம், தாமிருக்கு தங்கப் பதக்கங்கள்

எம்.யூ.எம். சனூன்

தேசிய மட்ட கராத்தேயில் WASHI SHOTOKAN KARATE DO சங்கத்தின் புத்தளம் கிளையின் மாணவர்களாகிய ஏ.எம்.அஸாம் 21 வயதுக்குட்பட்ட பிரிவிலும், யூ. தாமிர் 14 மற்றும் 15 வயதுக்குட்பட்ட பிரிவிலும் குமித்தே போட்டிகளில் பங்குபற்றி தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களை சங்கத்தின் பிரதான போதனாசிரியரும், பயிற்றுவிப்பாளருமாகிய சிஹான் எம். பெரோஸ் பயிற்றுவித்திருந்தார்.



### ஆசிய கிண்ண டியூ போல் சம்பியன்ஷிப்:

# மூன்றாமிடம் பெற்ற இலங்கை சார்பான பற்றி எம்பயர்



ஆசிய டியூபோல் சம்பியன்ஷிப்பில் சதீஷின் தலைமையிலும், வழிகாட்டலிலும் பங்கேற்ற பற்றி எம்பயர் கழகத்தினர் தம்வசப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அணிக்கு 7 பேர் கொண்ட டியூபோல் விளையாட்டானது முதன்முறையாக மட்டக்களப்பு மாவட்ட பற்றி எம்பயர் கழகத்தினரின் ஏற்பாட்டில் பயிற்றுவிக்கப்பட்டு இலங்கை சார்பாக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அணிக்கு 5 பேர் கொண்ட பெண்கள் குழாமினரும் அணிக்கு 7 பேர் கொண்ட ஆண்கள் குழாமினரும் இந்தியாவின் மகாராஷ்ரா மாநிலத்தில் இடம்பெற்ற போட்டி ஆசிய கிண்ண நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது மகேந்திரன் டிசாந்தின் பயிற்றுவிப்பில் பங்கேற்ற பெண்கள் குழாமினர் மூன்றாமிடத்தை தம்வசப்படுத்தியிருந்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 29 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.